**21.08.2025**
**IA 1/2025 in O.S.130/2024**
**RW1 – Ramesh**

குறுக்கு விசாரணை

மனுதாரர் சொத்தில் நான் அத்துமீறு நுழைய கூடாது என்று நீதிமன்றத்தால் கடந்த 10.06.2024ம் தேதி தடை உத்தரவிடப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக மேற்படி விபரம் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் தான் மேற்படி தடை உத்தரவை பிரப்பிக்கபட்டது நான் தற்போது வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 21.01.2025 அன்று காலை 10.30 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமாக சொத்தில் நானும், எனது மனைவி மற்றும் 8 நபருடன் சேர்ந்து மனுதாரரின் சொத்தில் அத்துமீறி நுழைந்து விவசாயம் செய்ய முற்பட்டேன் என்றாலும் அதை மனுதாரர் தடுக்க முற்பட்டபோது நாங்கள் அனைவரும் அவரை அடித்து அவருடைய இருசக்கர வாகனத்தையும் சேதப்படுத்திவிட்டோம் என்றால் அந்த நிலத்தை நான்தான் பயிர் செய்து வருகிறேன் மாடு, கன்று வைத்துள்ளேன் என்னை மீறி சுதாகர் என்பவர் தான் 10 நபர்களை அழைத்து வந்து நெல் அறுப்பவர்களை கொளுத்திவிடுவேன் என்று சுதாகர் தான் பிரச்சனை செய்தார், என்னையும் அடித்துவிட்டார், என் மனைவியின் தாலி செயினையும் அறுத்துவிட்டார். மேற்படி சம்பவத்தில் சுதாகருக்கு காயம் ஏற்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த சம்பவத்தில் எங்களுக்கு யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் எங்களுடன் இருந்த மணிகன்டன் என்பவருக்கு மண்டையில் தாக்கப்பட்டு வயிற்றில் அடித்ததில் கீறல் ஏற்பட்டும் மருத்துவமனையில் இருந்தார். மேற்படி மணிகண்டனுக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லும் மருத்துவசான்று ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அது என்னிடம் தான் உள்ளது. மணிகன்டனுக்கு ஏதும் காயம் ஏற்படவில்லை நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் சுதாகரை நாங்கள் அடித்ததால் எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் மீதும் மற்றும சுதாகர் மீதும் வழக்கு தாக்கல் ஆகியுள்ளது. இரு தரப்பினர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக புதியதாக வந்த கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று பொய்யாக **எ.ம.சா.4** அடங்கல் ஆவணத்தை இந்த

நடவடிக்கைக்கு பின்னிட்டு பெற்று தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு தாக்கல் செய்த காரணத்தினால் தான் மனுதாரர் கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று அதை ரத்து செய்து சான்றிதழ் பெற்று வந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் பயிர் செய்ததால் எனக்கு கொடுத்தார்கள் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழங்கிய அடங்கல் தவறு என்கிற காரணத்தினால் தான் கடந்த 11.04.2025ல் மனுதாரரின் பெயரில் புதிய அடங்கல் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேலும், இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ஏற்கனவே மனுதாரரின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவில் என்னுடைய மகளின் பெயரையும் பொய்யான தகவல் கூறி சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நிலம் கூட்டாக உள்ளதால் எனது மகளும் பெயரிலும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவையும் ரத்து செய்து புதிய பட்டா மனுதாரரின் பெயரில் தனி பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.மேற்படி தடை உத்தரவின் அடிப்படையில் தடை உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு ஏதேனும் நான் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் அதைப்பற்றி தெரியும். மேல் முறையீடு ஏதும் செய்யாமல் நான் நீதிமன்றத்தில் பொய்யான தகவல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தடை உத்தரவை மீறியும் நீதிமன்ற அவமதிப்பு செய்ததால் நான் தண்டிக்க படவேண்டிய நபர் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

கீழ்பென்னாத்தூர்